மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 200, திரு. கா. பூ. முனுசாமி, மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்.

200--

தருமபுரி மாவட்டத்தில் விவசாயிகளுக்கு இறால் வளர்க்க பயிற்சி அளித்தல்.

*24816-திரு. கா. பூ. முனுசாமி:

மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தருமபுரி மாவட்டத்திலுள்ள விவசாயிகளுக்கு இறால் வளர்க்க பயிற்சி அளித்திட அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்திலுள்ள விவசாயிகளுக்கு இறால் வளர்க்க பயிற்சி ஏதும் அரசால் அளிக்கப்படுவதில்லை.

திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் மீன் வளர்ப்போருக்குப் பயிற்சி அளித்த காரணத்தினால், இன்று அந்த மாவட்டத்தின் மத்தியில் பொருளாதார வளர்ச்சி மேம்பட்டிருக்கிறது. அதற்கொப்ப, அந்தப் பகுதியிலே நிறைய ஏரிகள் இருக்கின்ற காரணத்தினால் மேலும் கிராமப் பொருளாதாரம் மேம்படும் என்பதால், அங்கு இறால் வளர்க்கின்ற பயிற்சி அளிக்கும் திட்டத்தை அரசு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலுக்கு அருகாமையில்தான் இறால் வளர்க்க முடியும் என்ற சூழ்நிலை இருக்கிறது. மாறாக, உள்நாட்டு நீர்நிலைகளில், உள்நாட்டு இறாலை ஊக்குவிப்பதற்காக, நம்முடைய முதலமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், இறாலின் தாய்க் குஞ்சுகள் மிகவும் எளிதாகக் கிடைக்க வேண்டும் என்பதற்காக மட்டுமே, Hatchery-ஐ நிறுவுவதற்கு 2½ இலட்சம் ரூபாய் அளவிற்கு, தனியார் அதனை நடத்த முன்வந்தால், அத்தொகையை மானியமாக

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 5]

தருவதற்கு உத்தரவிட்டுள்ளார்கள். தாய் இறால் கிடைப்பதற்கு மிகுந்த சிரமம் இருக்கிற காரணத்தினால், அந்தப் பயிற்சி அங்கே அளிக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தினை ஏற்று, அந்த இடத்திலே தனியார் இறால் வளர்ப்பதற்கு முன்வந்தால், அவர்களுக்குத் தேவையான பயிற்சியும், மற்றும் உதவித் தொகையும் அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

185--

விசைத்தறி தொழிலாளர்களுக்குத் தனி வாரியம் அமைத்தல்.

23564-திருமதி கே. மரியம் உல் ஆசியா:

மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

விசைத்தறி தொழிலாளர்களுக்குத் தனி வாரியம் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை-

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர் :

விசைத்தறித் தொழிலாளர்களுக்கு தனி வாரியம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*)இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. அறிவிப்பு

உறுப்பினர் திரு. இரா. தாமரைக்கனி கைது செய்யப்பெற்றது குறித்து

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே (குறுக்கீடு)

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..............

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இருங்கள்; நான் இதைச் சொல்லிவிடுகிறேன், பிறகு நீங்கள் எழுப்பலாம். (குறுக்கீடுகள்)